**சுருக்கம்**

பள்ளிக் கல்வி- அரசுத் தேர்வுகள்- கடலோரப் பகுதிகளில் சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்டு சான்றிதழ்களை இழந்துள்ள மாணவர்களுக்கு இரண்டாம்படி சான்றிதழ்கள் கட்டணமின்றி வழங்குவது- ஆணை வெளியிடப் படுகிறது

---

**பள்ளிக் கல்வித் துறை**

அரசாணை (1-டி) எண்.2
நாள்-01.01.2005

----

ஆணை

26.12.2004 அன்று தமிழக கடலோரப் பகுதிகளில் சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட ஏராளமான மாணவர்கள் தங்களது சான்றிதழ்களை இழந்துள்ளதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசுத் தேர்வுகள் துறையால் வழங்கப்படும் அனைத்து சான்றிதழ்களின் இரண்டாம்படி (ஹுயீடஉையவந) கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு இரண்டாம்படி சான்றிதழ்களை உடனடியாக எந்தவிதமான கட்டணமின்றி வழங்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.ஞானதேசிகன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
மெட்ரபுகுலேஷன் பள்ளிகளின் இயக்குநர், சென்னை-6
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்சள்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.

அரசு செயலாளர், வருவாய்த் துறை, சென்னை-9.
ஆணையர், வருவாய் நிர்வாகத் துறை, சென்னை-5.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.